# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

## வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு கருத்திட்டம் (TNSWSP)

# பதவி வெற்றிடங்கள்

வர்த்தகர்கள் தங்கள் எல்லை தாண்டிய வர்த்தக ஓட்டங்கள் (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றம்) தொடர்பான ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளை எல்லை வர்த்தக ஒழுங்குமுறை நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க ஒற்றை நுழைவு மையமாக வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவ இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. அத்தகைய செயன்முறையின் விளைவுகள் தானியங்கி வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு மூலம் வர்த்தகர்களுக்கும் தெரிவிக்கப்படும்.

இதன் பிரகாரம், நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முன்மொழியப்பட்ட வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை அமுலாக்குவதற்கு ஒரு பிரத்தியேக திட்ட அமுலாக்கல் பிரிவை (PIU) நிறுவியது. எனவே, வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் PIU வில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மிகவும் தகுதி வாய்ந்த அபேட்சகர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**1) சிரேஷ்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விபரக்குறிப்பு அதிகாரி (PS 5) - (01 பதவி)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றில் கணனி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் அல்லது அது சார்ந்த துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் **அல்லது**
- இயைபுடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமையைப் பெற்றிருத்தல் **அல்லது**
- தொழில்நுட்பத் துறைக்கு இயைபான பதவியொன்றிற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். **மற்றும்**
- பதவிக்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால சேவை அனுபவம்.

**அல்லது**

- தொழில்நுட்பத் துறைக்கு இயைபான பதவியொன்றிற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். மற்றும்
- பதவிக்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் 08 வருட கால சேவை அனுபவம்.

**அல்லது**

- தொழில்நுட்பத் துறைக்கு இயைபான பதவியொன்றிற்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். மற்றும்
- பதவிக்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் 13 வருட கால சேவை அனுபவம். **மற்றும்**

**2) பங்குதாரர்களின் தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரி (PS 6A) - (01 பதவி)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றில் தொடர்பாடல், சந்தைப்படுத்தல் அல்லது அது சார்ந்த துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் **அல்லது**
- இயைபுடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமையைப் பெற்றிருத்தல் **அல்லது**
- தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் துறைக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். **மற்றும்**
- பதவிக்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் 01 வருட கால சேவை அனுபவம்.

**அல்லது**

- தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் துறைக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். **மற்றும்**
- பதவிக்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் 06 வருட கால சேவை அனுபவம்.

**அல்லது**

- தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் துறைக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமையில் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். **மற்றும்**
- பதவிக்கு இயைபான துறையில் குறைந்தபட்சம் 11 வருட கால சேவை அனுபவம்.

**3) ஒப்பந்தங்கள் அதிகாரி (PS 6B) - (01 பதவி)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனமொன்றில் வியாபாரம், பொருளியல், தொடர் வழங்கீட்டு முகாமைத்துவம், பொது நிர்வாகம் துறையில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் **அல்லது**
- இயைபுடைய துறையில் பட்டத்திற்குச் சமமான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தகைமையைப் பெற்றிருத்தல் **அல்லது**
- அரசாங்க பெறுகைகள் மற்றும் ஆதன முகாமைத்துவம் தொடர்பான உயர் சான்றிதழ் கற்கை நெறியொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெறுகை தொடர்பான வேறேதாவது டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல் **மற்றும்**
- ஒப்பந்த முகாமைத்துவம் அல்லது பெறுகைச் செயற்பாடுகள் அல்லது ஒப்பந்த நிர்வாகம் அல்லது செயற்பாட்டு நிர்வாகம் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்குவதில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம் (அரசாங்க நிறுவனமொன்றிலானால் மிகவும் பொருத்தமானது) **மற்றும்**
- நன்கொடை நிறுவனங்களுடன் (உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை) குறிப்பிடத்தக்க ஒப்பந்த நிர்வாக அனுபவம் மற்றும்
- MS Office உற்பத்திகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துவதில் தேர்ச்சி.
- இலங்கைச் சூழலுக்குக் பொருந்தக்கூடிய ஒப்பந்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பில் சிறந்த அறிவு மற்றும் புரிதல்.

**பொது நிபந்தனைகள்**

- 2025-08-04ஆம் திகதியில் 64 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த ஒப்பந்தக் காலத்தை நீடித்துக்கொள்ளும் அடிப்படையில் 24 மாத காலத்திற்கு விண்ணப்பதாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்.
- 2025-08-04ஆம் திகதியில் அல்லது அதற்கு முன் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாமல் விடும் உரிமையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
- இங்கு குறிப்பிப்படாத அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையின் போது எழும் எந்தவொரு சிக்கல் தொடர்பாகவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதி மற்றும் உறுதியான தீர்மானமாகும்.
- சம்பளம் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வரலாம் என்பதுடன் ஏனைய அனுகூலங்கள் 2019 மார்ச் மாதம் 05ஆம் திகதிய 01/2019ஆம் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளின் பிரகாரம் பதவிக்கு இயைபான PS வகுதிக்கேற்ப உரித்தாகும்.

**விண்ணப்பிக்கும் முறை**

அனைத்து விண்ணப்பதாரர்களும் தமது சுய தரவுப் படிவத்துடன் உறவினரல்லாத தம்மைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இரு நபர்களின் (இறுதியாக சேவையாற்றிய இரு தொழில் வழங்குநர்கள்) மற்றும் சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளை 2025-08-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். தற்போது அரச - அரை அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**முகவரி:**
**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு செயற்றிட்டம்,**
**03ஆம் மாடி,''லோட்டஸ் கட்டிடம்'', அலரி மாளிகை,**
**கொழும்பு 03.**

குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர் என்பதுடன் முழுமையற்ற சுய தரவுப் படிவத்தைச் சமர்ப்பித்தல் அல்லது தேவையான சகல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை தகைமையீனமாவதற்கு காரணமாகலாம்.

பதவிகள் தொடர்பான விபரங்கள் உட்பட மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து இந்த இணைய தளத்திற்குள் பிரவேசிக்கவும்.
**www.onetrade.lk**

**செயலாளர்,**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,**
**பொதுச் செயலகம்,**
**கொழும்பு 01.**

**2025-07-20ஆம் திகதி.**